சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 22.01.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **100/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-16 |
| சாட்சியின் பெயர் | : | ராமச்சந்திரன் |
| தந்தை பெயர் | : | சுபாஷ்சந்திரன் |
| கிராமம் | : | வேலங்குடி |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | வட்டாட்சியர் |
| வயது | : | 43 |

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு. ஆர். வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 7, 9, 10 எதிரகள் ஆஜர். 8 வது எதிரி வேறொரு வழக்கில் சிறையில் இருந்து வருகிறார். அவர் பி.டி. வாரண்ட் மூலம் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது நன்னிலம் வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பாக திருவாரூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மண்டல துணை வட்டாட்சியராக பணியிலிருந்தபோது திருவாரூர் மாவட்ட உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்த கொடுத்த வேண்டுகோள் கடித்தின் அடிப்படையில் , இவ்வழக்கில் உள்ள 2 வது எதிரி முத்துக்குமார் , 4 வது எதிரி பிரேம்குமார், 5 வது எதிரி கலைச்செல்வன், 6 வது எதிரி சுரேஷ், 10 வது எதிரி வாஞ்சிநாதன் ஆகியோர்கள் இந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவர்கள் என ஜாதி சான்றிதழ்களை வழங்கினேன். மேற்சொன்ன எதிரிகளுக்குரிய ஜாதி சான்றிதழ்கள் **அ.சா.ஆ- 2 முதல் அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இதுசம்மந்தமாக என்னை யாரும் விசாரிக்கவில்லை. சான்றிதழ்களை பெற்று சென்றனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:** இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.01.22 18:17:27 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.